பா.ஜ.க.வை வீழ்த்துவதே அனைத்து தலைவர்களின் ஒற்றை இலக்கு!

முதல்வர் பேட்டி - முதல் பக்கத் தொடர்ச்சி

பங்கீடுகளை மட்டுமே செய்து கொள்ளலாம். அதுவும் முடியவில்லை என்றால் பொதுவேட்பாளர் அறிவித்துக் கொள்ளலாம். தேர்தலுக்கு பிறகு கூட்டணி அமைத்துக் கொள்ளலாம் என்பது சரியான நிலைப்பாடாக இருக்க முடியாது. அரசியல் கட்சிகளுக்கு இடையே குறைந்தபட்ச செயல்திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

ஒருங்கிணைந்த நடவடிக்கைக்குழு அமைத்திட வலியுறுத்தினேன்!

இதுபோன்று எழும் பிரச்சினைகளைச் சரிசெய்ய ஒருங்கிணைந்த நடவடிக்கைக் குழு அமைக்கப்பட வேண்டும். என்று வரிசையாகச் நான் அந்தக் கூட்டத்திலே பேசுகின்ற போது வலியுறுத்தி சொல்லி இருக்கிறேன்.

பா.ஜ.க.வை வீழ்த்துவதை அனைத்துத் தலைவர்களும் ஒற்றை இலக்காகக் கொண்டு இருக்கிறார்கள்.

பா.ஜ.க.வை வீழ்த்த அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என்று நினைத்தோம். அந்த ஒற்றுமை பாட்னாவில் ஏற்பட்டு இருக்கிறது.

ஒற்றுமையே வெற்றிக்கு அடிப்படை. நிச்சயமாக அகில இந்திய அளவில் பா.ஜ.க. தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இப்போதுதான் கருவாகி இருக்கிறது. அது உருவாக இன்னும் சில மாதங்கள் ஆகலாம். அடுத்தடுத்த நடவடிக்கைகளை பின்னர் உங்களுக்குத் தெரிவிக்கிறோம்.

பாட்னாவில் கூடினோம்.

மகிழ்ச்சியாகத் திரும்பினோம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்வியும், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலும் வருமாறு:

செய்தியாளர்கள் கேள்விக்கு பதில்

செய்தியாளர் : இந்த கூட்டம் நடந்து முடிந்தபின்னர் செய்தியாளர் சந்திப்பு நடைபெற்றது. நீங்களும், ஆம் ஆத்மி கட்சியும் கலந்து கொள்ளவில்லை. அதில் ஏதாவது காரணம் இருக்கிறதா ?

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : நன்றி சொல்லி முடிக்கும் வரை நான் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அதற்குப்பிறகு எனக்கு விமான நிலையம் செல்ல நேரமாகிவிட்டது. மதிய உணவுக்கு பிறகுதான் செய்தியாளர் சந்திப்பு வைத்திருந்தார்கள். அதனால் மதிய உணவு கூட சாப்பிட முடியாமல், விமானத்தில் தான் சாப்பிட்டேன். அவர்களிடம் சொல்லி விட்டு தான் வந்தேன். வேறு எந்த காரணமும் இல்லை. அதுதான் உண்மை.

குறைந்த பட்ச செயல் திட்டம் வகுக்கப்பட வலியுறுத்தினேன்!

செய்தியாளர் : ஆத் ஆத்மி கட்சி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். டெல்லி Ordinance தொடர்பாக காங்கிரஸ் கட்சி அவர்களது நிலைப்பாடு குறித்து இதுவரை எதுவும் தெரிவிக்கவில்லை. அதுகுறித்து...

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : நீங்கள் அது குறித்து அவரிடம் தான் கேட்க வேண்டும்.

செய்தியாளர் : இரண்டாம் கட்ட கூட்டம் சிம்லாவில் நடைபெறும் என்று கூறியிருக்கிறார்கள். முதற்கட்ட கூட்டத்தில் முழுமையாக எதுவும் எட்டப்படவில்லையா? எதற்காக இரண்டாவது கூட்டம் ?

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்: முதல் கூட்டத்தில் கூடினோம். என்ன செய்வது என்பது பற்றி முடிவு செய்திருக்கிறோம். போகப்போக அடுத்தக் கூட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்போகிறோம் என்பதை தெரிவிக்கிறோம்.

செய்தியாளர் : பிரதமர் வேட்பாளர் யார் என்பது குறித்து....

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் : அது இன்னும் முடிவு செய்யவில்லை. நீங்கள் எல்லோரும் ஆர்வமாக இருப்பதைப் பார்த்தால். பிரதமர் வேட்பாளர் யார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது தெரிகிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் கேள்விக்கு பதிலளித்தார்.

மறவமங்கலத்தில்

தலைவர் கலைஞர் நூற்றாண்டு பிறந்த நாள் பொதுக்கூட்டம்!

கே.ஆர்.பெரியகருப்பன் - மு.தென்னவன் - லியோனி பங்கேற்பு!

சிவகங்கை, ஜூன் 25- சிவகங்கை மாவட்டம் காளையார் கோவில் தெற்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் மறவமங்கலத்தில் ஒன்றிய கழக செயலாளர் யோக கிருஷ்ணகுமார் ஏற்பாட்டின் பேரில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் முன்னிலையில் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் முன்னிட்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

முன்னதாக தெற்கு ஒன்றிய செயலாளர் யோக. கிருஷ்ணகுமார் வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியில் திண்டுக்கல். ஐ.லியோனி குழுவினரின் கலைஞரின் புகழுக்கு பெரிதும் துணைநின்றது அரசியல் பணியே - இலக்கியப் பணியே என்ற தலைப்பில் இன்னிசை பட்டிமன்றம் நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட கழக துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன் திருமதி ஜோன்ஸ் ரூசோ, கே.எஸ்.எம். மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன் ஆகியோர் பேசினார்கள். பொதுக்கூட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆர். எம்.கென்னடி., ஆரோக்கிய சாமி, மாவட்ட இலக்கிய அணி செயலாளர் கவிஞர் சிவ. முத்து வளவன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாளர் கதி. ராஜ்குமார், தெற்குகழக நிர்வாகிகள் வரதராஜன், தோக்கப்பன், சமயத் துறை, மகேஸ்வரி வெங்கடேஷ், தென்னரசு, ஆர்.கோதண்டபாணி, வீரய்யா, அமுதாரமேஷ், வெங்கடேசன், செல்லையா, திருமால் அழகு, செல்வி, சேகரன்,

மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் அழகையா, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், ஊராட்சி மன்ற தலைவர் ராஜ கோபால் ஹக்கீம் உட்பட பலர் கலந்து கொண்டார்கள். மறவமங்கலம் ஐயப்பன் நன்றி கூறினார். கூட்டத்திற்கான ஏற்பாடுகளை காளையார் கோயில் தெற்கு ஒன்றிய செயலாளர் யோககிருஸ்ணகுமார் தலைமையில் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளை நிர்வாகிகள் செய்திருந்தார்கள்.

மதுரை மாவட்டத்தில் ரூ.20 கோடியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல மையம்!

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ரூ.6.34 கோடியில் 15 புதிய சுகாதார மைய கட்டடம்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன்-பி.மூர்த்தி தொடங்கிவைத்தனர்!

மதுரை மாவட்டம் ஆனையூரில் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் புதிதாக கட்டப்பட்டுள்ள 15 புதிய சுகாதார மைய கட்டிடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் நேற்று முன்தினம் (23.6.2023) திறந்து வைத்தார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் சு. வெங்கடேசன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, மாநகராட்சி மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் மாநராட்சி ஆணையாளர் பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்). மாநராட்சி துணை மேயர் நாகராஜன், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி.சூரியகலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

மதுரை, ஜூன் 25- மதுரை அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக நேற்று முன்தினம் (23.06.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகியோர் ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஒப்புயர்வு மையத்திற்கான கட்டுமான பணிகளையும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் ரூ.6.34 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 15 புதிய சுகாதார மைய கட்டடங்களையும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசிய தாவது:

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நடைபெற்ற மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் 2022-2023 மானிய கோரிக்கை எண்.19-ன் அறிவிப்பு 67-ன் படி, மதுரை அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் ரூ.20 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல ஒப்புயர்வு மையத்திற்கான கட்டுமான பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. இது 56,685 சதுர அடி பரப்பளவில் தரைதளத்துடன் 2 மாடிகள் என 100 படுக்கை வசதிகளுடன் கூடிய கட்டடமாக அமைய உள்ளது. இக்கட்டுமானப் பணிகளை 1 வருட காலத்திற்குள் பயன்பாட்டிற்கு கொண்டு வர அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மதுரை அரசு இராசாசி மருத்துவமனை வளாகத்தில் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி பங்களிப்புடன் ரூ.155.65 கோடி மதிப்பீட்டில் டவர் பிளாக் கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் இன்னும் 2 மாத காலத்திற்குள் முழுமையாக நிறைவேற்றப்படும்.

நிதி ஆதாரம் பெறப்பட்டு கட்டுமானப் பணி!

மேலும், மதுரை மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளுக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.6.34 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள 15 புதிய சுகாதார மைய கட்டடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் அந்தந்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் இருக்கும் இடத்திலேயே எளிதில் தரமான மருத்துவ வசதி பெற வாய்ப்பாக அமையும். திருமங்கலம் பகுதியில் செயல்பட்டு வந்த மதுரை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தற்போது உள்ள இடம் மழைக்காலங்களில் தண்ணீர் சூழ்ந்து கட்டடங்கள் இயங்க முடியாத காரணத்தால் தோப்பூர் பகுதியில் மாற்று இடம் தேர்வு செய்வதற்காக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதியில் 5 ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு நிதி ஆதாரம் பெறப்பட்டு விரைவில் கட்டுமானப் பணிகள் தொடங்கும்.

பொதுமக்களிடையே நடைப்பயிற்சி பழக்கத்தை ஊக்குவித்திடும் நோக்கில் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் "நடப்போம் நலம் பெறுவோம் HEALTH WALK" என்ற திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு செயல்வடிவம் கொடுக்கும் விதமாக மதுரை ரேஸ்கோர்ஸ் பகுதியிலிருந்து பொதுமக்கள் 8 கி.மீ. நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கு முன்னோடியாக முதலில் மதுரை மாவட்டத்தில் செயல்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானத்திற்கான நிதி ஆதாரம் தொடர்பாக ஒன்றிய அரசின் பிரதிநிதிகளுடன் ஜப்பான் நாட்டிற்கு நேரடியாக சென்று ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை தலைமை அலுவலகத்தில் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டது. டிசம்பர் 2023-க்குள் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான டிசைன் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரும் பணிகள் நடத்திட திட்டமிடப்பட் டுள்ளது எனவும், டிசம்பர் 2024-க்குள் கட்டுமானப் பணிகளை தொடங்கி 2028-ஆம் ஆண்டிற்குள் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவேற்றப்படும் என தெரிவித்துள்ளார்கள். விரைவில் அதற்கான பணிகள் தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

முன்னதாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் ஆகியோர் தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களில் விரைவில் தொடங்கப்படவுள்ள "நடப்போம் நலம் பெறுவோம் HEALTH WALK" திட்டத்தின் கீழ் மதுரை ரேஸ்கோர்ஸ் பகுதியில் பொதுமக்கள் 8 கி.மீ நடைபயிற்சி மேற்கொள்வதற்கான நடைபாதையை தேர்வு செய்து உறுதிபடுத்துவதற்காக ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், மதுரை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தற்போது உள்ள இடம் மழைக்காலங்களில் தண்ணீர் சூழ்ந்து கட்டிடங்கள் இயங்க முடியாத காரணத்தால் தோப்பூர் பகுதியில் மாற்று இடம் தேர்வு செய்வதற்காக நேரில் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்வுகளின் போது, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மா.சௌ.சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் திருமதி இந்திராணி பொன்வசந்த், மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் சு.வெங்கடேசன், மாநகராட்சி ஆணையாளர் கே.ஜே. பிரவீன்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி (மதுரை வடக்கு), மு.பூமிநாதன் (மதுரை தெற்கு), ஆ.வெங்கடேசன் (சோழவந்தான்), இராசாசி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் இரத்தினவேல், தலைமைப் பொறியாளர் மதுரை மண்டலம் எஸ்.ரகுநாதன், மாவட்ட ஊராட்சி தலைவர் திருமதி. சூரியகலா கலாநிதி, துணை மேயர் தி. நாகராஜன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தி.மு.கழகம் ஒரு தென்னை
மரம்தான். அதன் தலைவர்கள்
தியாக உள்ளம்
கொண்டவர்கள் தியாகச்
சுடர்கள், கழகம் வளர்கிறபோது
தென்னை
மரத்திலிருந்து மட்டை
விழுவது போல் விழுந்து
தியாக வடுக்களை ஏற்படுத்தினார்கள்.

இன்று கழகம் வளர்ந்திருக்கிறது. இந்த
மரத்தின் உச்சியில் உள்ள
இன்ப வாழ்வென்னும் இளநீரைப்
பறிக்க ஏறும்
ஏழை மக்களுக்கு கழகத்தின் தியாகச்
செம்மல்கள் ஏற்படுத்திய
வடுக்கள் உதவியாக
இருக்கின்றன.

தியாகிகள் வளர்த்த தி.மு.கழகம் என்னும்
தென்னைமரத்தில் ஏறி ,
" நல்லாட்சி எனும் இளநீரை " பெற்றுக்
கொள்ளுங்கள் என்று
மக்களை அழைக்கிறேன்.

... ஏழை மக்களின்
ஏந்தல் **கலைஞர்.....**

வைகோ பொதுச் செயலாளராகத் தேர்வு!

ம.தி.மு.க. புதிய நிர்வாகிகள் பட்டியல்!

செய்தி தொடர்பாளராக மின்னல் முகமது அலி நியமனம்!

சென்னை, ஜூன். 25 - ம.தி.மு.க.வின் 5வது அமைப்பு தேர்தல் சமீபத்தில் நடந்தது. இந்த தேர்தலில், ம.தி.மு.க. பொதுச் செயலாளராக வைகோ மீண்டும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்.

இந்நிலையில், ம.தி.மு.க.வில் புதிய நிர்வாகிகள் பட்டியலை கட்சி தலைமை வெளியிட்டுள்ளது.

கொள்கை விளக்க அணி மாநில செயலாளராக வந்தியதேவன், இளைஞர் அணி மாநில செயலாளராக ஆசைத்தம்பி, மாணவர் அணி மாநில செயலாளராக சசிக்குமார், மகளிர் அணி மாநில செயலாளராக மல்லிகா தயாளன், தொண்டர் அணி ஆலோசகராக பாஸ்கர சேதுபதி, செய்தி தொடர்பாளராக மின்னல் முகமது அலி அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று, சட்டத் துறை மாநில செயலாளராக அமல்ராஜ், விவசாய அணி மாநில செயலாளராக ராஜேந்திரன், சிறுபான்மைப் பிரிவு மாநில செயலாளராக சிக்கந்தர், தீர்மானக்குழு மாநில செயலாளராக மணிவேந்தன், மருத்துவர் அணி மாநில செயலாளராக சுப்பாராஜ், வெளியீட்டு அணி மாநில செயலாளராக ஹேரிங்டன், மீனவர் அணி மாநில செயலாளராக பேட்ரிக், ஆபத்துதவிகள் அணி மாநில செயலாளராக சுமேஷ், இலக்கிய அணி மாநில செயலாளராக செல்வராஜ், கலைத்துறை மாநில செயலாளராக குடியரசு ஆகியோர் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை - ஜப்பான் நேரடி விமான சேவை!

ஒன்றிய அமைச்சருக்கு மீண்டும் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!

சென்னை, ஜூன் 25- வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் ஒன்றிய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் ஜோதிராதித்ய எம்.சிந்தியாவிற்கு சென்னையிலிருந்து ஜப்பானுக்கு நேரடி விமான சேவை வழங்கிட ஆணையிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது.

தான் ஏற்கனவே தங்களுக்கு 25.4.2023 அன்று தேதியிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளவாறு கோவிட் பெருந்தொற்று பரவி இருந்த காலத்தில் ரத்து செய்யப்பட்ட சென்னை - ஜப்பான் நேரடி விமான சேவையை மீண்டும் துவங்கிட வேண்டும் என்று தங்களை மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கின்றேன்.

விமான மூலம் பயணம் செய்வது தற்காலத்தில் விரைவான வசதியான பயணத்துக்கு மட்டுமின்றி பாதுகாப்பான பயணமாகவும் கருதப்படுகிறது. உலகில் உள்ள மிகப்பெரிய நகரங்கள் எல்லாம் விமான சேவைகளால் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் ஒரு நகரத்தில் இருந்து, இன்னொரு நாட்டில் உள்ள நகரத்துக்கு விரைந்து செல்ல முடிகிறது.

சென்னை மாநகரம் இந்தியாவில் மூன்றாவது பெரிய நகரமாகவும் தென்னாட்டில் மிகப்பெரிய நகரமாகவும் உள்ளது வாரத்திற்கு 164 விமானங்கள் சென்னைக்கும் டோக்கியோவுக்கும் சென்று வந்து கொண்டிருந்தன. 10 விமான நிலைய சேவை நிறுவனங்கள் இவற்றை வழங்கி வந்தன. கோவிட் பெருந்தொற்று காலத்தில் விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டிருந்தன இவ்வாறு மீண்டும் விமான சேவைகள் துவங்கப்பட்ட பின் சென்னை-டோக்கியோ நேரடி விமான சேவை மட்டும் துவங்கப்படவில்லை. சென்னை - டோக்கியோ நேரடி விமானத்தில் விமான பயணம் 9 மணி 15 நிமிடங்கள் ஆகும் ஆனால் தற்பொழுது சென்னையில் இருந்து டோக்கியோ நகரத்திற்கு இணைப்பு விமானம் மூலம் பயணம் செய்வதால் பயண நேரம் கூடுதலாகி வருகிறது.

இது குறித்து எங்களின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட கடிதம் எழுதியுள்ளார். அதில் சென்னை - டோக்கியோ நேரடி விமான சேவையை மீண்டும் துவக்க வேண்டும் என்று கோரியுள்ளார். மேலும் அவர் ஜப்பான் நாட்டு தொழில் அதிபர்களும், தமிழகத்திலிருந்து புலம் பெயர்ந்து ஜப்பான் நாட்டில் வணிக மற்றும் தொழில் நிறுவனங்களை நடத்தி வரும் தமிழர்களும், சென்னை - டோக்கியோ நேரடி விமான சேவையை மீண்டும் துவங்க வேண்டும் என்று வற்புறுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் நிசான், தோஷிபா, யமஹா, கோமட்சு, மிட்சுபிஷி மற்றும் ஹிட்டாச்சி போன்ற தொழில் நிறுவனங்கள் தங்கள் தொழிற்சாலைகளின் கிளைகளைத் தமிழகத்தில் துவங்கியுள்ளன. ஜப்பான் -இந்தியா கூட்டு முதலீட்டை ஊக்கப்படுத்தும் திட்டத்தின் கீழ் இந்தியாவில் உருவாக்கப்பட்டுள்ள 12 தொழில் நகரங்களில் மூன்று தமிழகத்தில் உள்ளது. மேலும் கடந்த 20 வருடங்களில் 600க்கும் மேற்பட்ட ஜப்பான் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தங்கள் கிளைகளை படிப்படியாக துவங்கியுள்ளன. இந்தியாவிலேயே மிக அதிகமான அளவில் ஜப்பானியர்கள் இடம் பெயர்ந்து வாழ்ந்து வருவது தமிழ்நாட்டில் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தற்போது கோவிட் தொற்று குறைந்துள்ளதாலும் சென்னை - டோக்கியோ விமான சேவைக்கு அதிக தேவை இருப்பதால் மீண்டும் சென்னை - டோக்கியோ விமான சேவையை துவங்க வேண்டும் என்று மீண்டும் வற்புறுத்தி கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி இக்கடிதத்தில் கூறியுள்ளார்.

நீலகிரி மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் தேர்தலில்

கழக வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி!

மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக்கிடம் வாழ்த்துப் பெற்றனர்!

உதகை, ஜூன் 25- நீலகிரி மாவட்ட திட்டக்குழு தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்கள் ரவிகுமார், முஸ்தபா, ஜார்ஜ், ராமசாமி, ராஜேந்திரன், பாபு, விசாலாட்சி ஆகியோரும், ஏற்கனவே மாவட்ட ஊராட்சி உறுப்பினர்களாக உள்ள பொன்தோஸ், உமா ராஜன், வனஜா, மீனா, சசிகலா, அனீபா ஆகியோர் மாவட்ட திட்டக்குழு உறுப்பினர்களாக வெற்றி பெற்றதை தொடர்ந்து மாவட்ட தி.மு.க. அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலய முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் திருவுருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக்கிடம் வாழ்த்துப் பெற்றனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் நாசர் அலி, மாநில ஆதிதிராவிடர் நலக் குழு துணை செயலாளரும், மாவட்ட ஊராட்சி தலைவருமான பொன்தோஸ், மாநில விளையாட்டு அணி துணை செயலாளர் வாசிம் ராஜா, உதகை தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவன், தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் சதக்கத்துல்லா, தொரை, பில்லன், உதகை நகராட்சி தலைவர் வாணீஸ்வரி, உதகை ஊராட்சி ஒன்றிய தலைவர் மாயன், மாவட்ட பிரதிநிதிகள் கார்த்திக், இஸ்மாயில், மணிகண்டன், உதகை நகர மன்ற உறுப்பினர்கள் ரவி, ரீட்டாமேரி, ரமேஷ், ரகுபதி, விஷ்னு, கஜேந்திரன், நாகமணி, கீதா, மேரி பிளோரினா, பிரியா வினோதினி, திவ்யா, அனிதா லட்சுமி, பிளோரினா, மீனா, ஜாகீர்உசேன், மன்சூர், கோபி, சாந்தாசந்திரன், வசந்தி, சுசிலா, சித்ரா, பாக்கியவதி, சமீனா மற்றும் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.